# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruittttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 9 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2019 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.




அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

**“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”** – எனது தலைப்பும் இதுவே. சோழர் ஆட்சிக்காலம், தமிழர் வரலாற்றில் வீரத்தடம் பதித்த பொற்காலம் ஆகும்!. ஆலயங்களை மட்டுமல்லாமல் பலமான கடற்படையையும் அமைத்து பாதி உலகை தன் காலடியில் வீழ்த்திய பெருமை ராஜ ராஜ சோழன் மகன் ராஜேந்திர சோழனையே சாரும்.

மத்திய இந்தியா, பங்களாதேஷ், குரேஷியா வரை அவன் ஆட்சி பரவியிருந்தது. அதுமட்டுமல்லாமல் கடல் கடந்து இலங்கை, அந்தமான், நிக்கோபார், இலட்சத் தீவுகள், சுமத்திரா மற்றும் ஜாவா, மலேஷியா, கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகளையும் கைப்பற்றி தமிழனின் வீரத்தை தரணி எங்கும் பறை சாற்றிய ஒரே மன்னன் ராஜேந்திர சோழனே!



## “தமிழன் என்று சொல்லடா
## தலை நிமிர்ந்து நில்லடா”

அவன் ஆட்சி செய்த நாடுகளில் எல்லாம் சோழ சாம்ராஜ்யத்தின் சின்னங்கள், சிவாலயங்கள், சிற்ப வடிவங்கள் ஆகியன காலம் அழிக்க முடியாத கலைப் பொக்கிஷங்களாக இன்றும் காட்சி தருகின்றன.

தஞ்சைப் பெரிய கோயிலை அமைத்து அதனை சாதனை வடிவமாக ஆக்கினான் தந்தை ராஜ ராஜ சோழன்!. அவன் மகன் ராஜேந்திர சோழனோ அதற்கும் மேலாக – தமிழனின் பெருமையை உலகுக்கு காட்டும் வகையில் காலத்தை வென்ற கலை வடிவமாக 'அங்கோர் வற்' (Angor Wat) ஆலயத்தை கம்போடியாவில் அமைத்தான். ஆயிரமாயிரம் சிவலிங்கங்கள் ஆலயத்தை அலங்கரிக்கின்றன!. உலகம் வியக்கும் கலைக்கோயில் அது!. பார்வையிட பல்லாயிரம் பேர் தினமும் வருகின்ற சுற்றுலாத் தலமும் அதுவே!



ஆஹா, நம் தமிழ் மன்னரின் வீரமும் கலை உணர்வும் எத்தனை எத்தனை அளப் பெரியது! அந்த வரலாற்று வல்லரசனுக்கு நாம் தலை வணங்கித்தான் ஆக வேண்டும்!

எனவே **"தமிழன் என்று சொல்லடா**

**தலை நிமிர்ந்து நில்லடா".**

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.